DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.289/2016
Deposition of witness for PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.பாலகணேசன் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 5.1.2023

முதல் விசாரணை –

1. நான் தற்போது எனது பணியிலிருந்து ஓய்வு பெற்று ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 18.6.2015ம்தேதி க்யூ பிரிவில் விருதுநகரில் பணிபுரியும்போது நான், ஆய்வாளர் சாந்தலட்சுமி, சார்பாய்வாளர் ராதா மற்றும் மற்ற போலிஸ் பார்ட்டியுடன் சேர்ந்து வன்னியம்பட்டி காவல் நிலைய சரகம் மொட்டமலை அகதிகள் முகாமிற்கு மேற்கே தகவலின்பேரில் சென்றோம்.

2. மொட்டமலை அகதிகள் முகாமிற்கு மேற்கே பிரித்வி கிரானைட்டிற்கு சென்று பார்க்கும்போது அங்கு குழி தோண்டி அந்த குழியினுள் 110 டெட்டனேட்டர்கள், ஜெலட்டின் 131, வயர் 600 மீட்டர், கரி மருந்து திரி 60 மீட்டர் இருந்ததை சாட்சிகளான விஏஓ மற்றும் தலையாரி ஆகியவர்கள் முன்னிலையில் மேற்படி பொருட்களை கைப்பற்றி சுமார் 14.30 மணிக்கு தனியறிக்கை தயார் செய்து வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் பொருட்கள், ஆவணங்கள், மற்றும் எதிரியை ஒப்படைத்தோம். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை –

1. சம்பவ நாளன்று நாங்கள் எத்தனை மணிக்கு பிரித்வி கிரானைட் குவாரிக்கு சென்றோம் என்றால் மாலை 14.30 மணிக்கு சென்றோம். நாங்கள் செல்லும்போது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் ஒரு நபர் இருந்தார். அந்த ஒரு நபர் தவிர வேறு எந்த நபரும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் போகும்போது விஏஓ அங்கிருந்தாரா என்றால் குவாரியின் வாசலில் இருந்தார். பின்பு நாங்கள் உள்ளே சென்றோம்.

2. அத்தாட்சியில் நானும் சாட்சி கையெழுத்திட்டேன் என்றால் சரிதான் என்று கூறிவிட்டு இல்லை என்று கூறியுள்ளார். நான் சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் அத்தாட்சியில் சாட்சி கையெழுத்து போட்டிருப்பேன் என்றால் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். அத்தாட்சியில் யார் கையெழுத்து செய்துள்ளார் என்றால் காவல் ஆய்வாளர் செய்துள்ளார். சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ள தனியறிக்கையில் யார் கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆய்வாளர் கையெழுத்து செய்தார்.

3. என்னை வழக்கு சம்மந்தமாக எப்போது எந்த ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சம்பவ நாளன்று வன்னியம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார். நாங்கள் சம்பவயிடத்தில் எவ்வளவு மணிநேரம் இருந்தோம் என்றால் சுமார் 1 லிருந்து 2 மணி நேரம் இருந்திருப்போம். குவாரியிலுள்ள எந்த குழியிலிருந்து வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று குறிப்பாக தெரியுமா என்றால் சம்பவயிடத்தில் ஒரு குழி மட்டும்தான் இருந்தது. அந்த குழியிலிருந்து வெடிபொருட்களை கைப்பற்றினோம்.

4. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எந்தவொரு வெடிபொருளும் விதிகளை மீறி வைக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தின்போது சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. ஆய்வாளர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.